**(DEPOSITION OF WITNESS (Chapter XXIII code of CRPC)**
**Judicial Magistrate Court, Palacode.**

| | | |
|---|---|---|
| Case Number | : | CC.No.133/2022 |
| Deposition of Witness for | : | PW- 5 |
| Name and Age | : | திருமதி. சசிரேகா (வயது 40) |
| Father / Husband Name | : | க/பெ.பாலாஜி |
| Occupation | : | மூத்த உதவி மருத்துவர் |
| Village | : | பாலக்கோடு அரசு மருத்துவமனை |
| Taluk | : | பாலக்கோடு |

**நாள்** – 28.07.2026.

Solemnly affirmed and sworn in this Court, in accordance with provisions of Act of 1873.

**Accused Present.**

**PW- 5**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் தற்போது பாலக்கோடு அரசு மருத்துவமனையில் மூத்த உதவி மருத்துவராக பணி செய்து வருகிறேன். கடந்த 26.04.2022-ம் தேதி இரவு 11.20 மணிக்கு பணிபுரிந்த போது, மாதேஷ், 28 வயது, த/பெ.நாகராஜ் என்பவரை அவருடைய அப்பா நாகராஜ் என்பவர் சிகிச்சைக்கு அழைத்து வந்தார். அவரை விசாரித்தபோது அடையாளம் தெரிந்த மூன்று நபர்களால் 26.04.2022 அன்று இரவு 08.00 அவருடைய வீட்டின் அருகே கட்டையால் தாக்கியதாக கூறினார். அவரை பரிசோதித்த போது அவருக்கு கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டது.

1. இடதுபக்க கழுத்தில் 1X0.2 cm அளவில் சிராய்ப்பு காயம் காணப்பட்டது.
2. இடதுபக்க முன்கையில் 8X6 cm அளவில் கண்ணிய காயம் காணப்பட்டது.

மேலும் முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டு அவரை X-Ray மற்றும் எலும்பு மருத்துவரின் கருத்திற்காக தர்மபுரி அரசு மருத்துமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். அங்கு இடது முன்பக்க கை X-Ray-யில் எலும்பு முறிவு காணப்பட்டது. மேற்கூறிய காயம் ஒன்று சாதாரண காயம் என்றும், காயம் இரண்டு கொடுங்காயம் என்று சான்று வழங்கினேன். என்னிடம் காட்டப்படும் காயச்சான்று நான் வழங்கியது தான். மேற்படி **காயச்சான்று அ.சா.ஆ.2-ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

AJAY VIKRESH KUMAR G

Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.07.28 17:57:40 +0530

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

வழக்கில் புகார்தாரர் தன்னை மூன்று நபர்கள் தாக்கியதாக சொல்லியுள்ளார் தாக்கிய நபர்களின் பெயரை குறிப்பிட்டு சொல்லவில்லை. கட்டையால் தாக்கியதாக தான் சொல்லியுள்ளார். கட்டையால் அடிக்கும்போது அடிப்பட்ட இடத்தில் மேல்காயம் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் மேல்காயம் மற்றும் உள்காயம் இரண்டும் ஏற்பட வாய்ப்புள்ளது. கட்டையால் தாக்கும்போது தாக்கப்பட்ட இடத்தில் உள்ள தோளில் சிராய்ப்பு காயம் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் வாய்ப்புள்ளது, மேல்காயங்கள் இல்லாமலும் உள்காயம் ஏற்பட வாய்ப்புள்ளது. போலிசார் என்னை விசாரித்தபோது கட்டையை காட்டி விசாரிக்கவில்லை என்றால் சரிதான். கழுத்தில் சிராய்ப்பு காயம் எவ்வாறு ஏற்பட்டதென மாது என்னிடம் சிகிச்சையின் போது கூறவில்லை. மேற்படி காயங்கள் மேட்டில் இருந்து பள்ளத்தில் தவறி விழுந்தால் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான்.

Taken down by me/before me in Open Court. Read over/interpreted to the witness and acknowledged by him/her to be correct.

AJAY VIKRESH KUMAR G

Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.07.28 17:57:45 +0530

Judicial Magistrate,
Palacode.

**(DEPOSITION OF WITNESS (Chapter XXIII code of CRPC)**
**Judicial Magistrate Court, Palacode.**

| | |
|---|---|
| Case Number | : CC.No.133/2022 |
| Deposition of Witness for | : PW– 6 |
| Name and Age | : திரு. கிருஷ்ணமூர்த்தி (வயது 43) |
| Father / Husband Name | : வெங்கடாசலம் |
| Occupation | : விவசாயம் |
| Village | : உடையாண்டஅள்ளி |
| Taluk | : தேன்கனிகோட்டை |

**நாள்** – 28.07.2026.

Solemnly affirmed and sworn in this Court, in accordance with provisions of Act of 1873.

**Accused Present.**

**PW– 6**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் தற்போது உடையாண்டஅள்ளியில் குடியிருந்துக்கொண்டு விவசாயம் செய்து வருகிறேன். 27.04.2022ம் தேதி மதியம் 03.00–03.15 மணிக்கு மாது என்பவர் வீட்டிற்கு மறுநாள் வேலைக்கு வரும்படி அழைக்க சென்றிருந்தேன். அங்கிருந்த மாதுவின் அண்ணன் தம்பிகள் அடிப்பட்டிருந்தார்கள். போலிசார் கலிகோளை காட்டினார்கள். பிறகு சாட்சியாக என்னிடம் கையொப்பம் போடசொன்னார்கள். நான் அதற்கு சாட்சியாக கையொப்பம் செய்தேன். போலிசார் அங்கு வரைபடம் வரைந்தார்கள். என்னுடன் சேர்ந்து பெருமாள் என்பவரும் கையொப்பம் செய்தார். என்னிடம் காட்டப்படும் பார்வைமகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **பார்வைமகஜர் அ.சா.ஆ.3–ஆக குறியீடு செய்யப்படுகிறது.** கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.4–ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னிடம் காட்டப்படும் கலிகோளை தான் நான்கு ஆண்டுகளுக்கு முன்பு போலிசார் கைப்பற்றிய கலிகோளா எனக்கு நினைவில்லை. இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் 10–ம் வகுப்பு வரை படித்துள்ளேன். புகார்தாரரை எனக்கு தெரியும், என்னிடம் கூலி வேலைக்கு வருவார். சம்பவத்தன்று தான் போலிசார் என்னை

AJAY VIKRESH KUMAR G  Digitally signed by AJAY VIKRESH KUMAR G Date: 2026.07.28 17:57:52 +0530

விசாரித்தார்கள். பிரச்சனை எங்கு ஏற்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது வீட்டின் அருகே ஓடு உடைந்து இருந்தது. சம்பவத்தன்று மாலை 03.00மணியளவில் அங்கு சென்றேன் என்றால் சரிதான். நான் சம்பவ இடம் செல்வதற்கு முன்பே போலிசார் அங்கு இருந்தார்கள். என்னுடன் கையொப்பம் செய்த பெருமாளின் விபரம் எனக்கு தெரியாது. சம்பவ இடத்தில் போலிசார் கலிகோளை எடுத்து காண்பித்தார்களா என்றால் சம்பவ இடத்தில் இருந்ததை காண்பித்தார்கள். என்னிடம் காண்பித்து சாட்சியாக கையொப்பம் பெற்று சென்றார்கள். அதன்பிறகு நான் வீட்டிற்கு சென்றுவிட்டேன். சம்பவ இடத்தில் இருந்த நபர்களின் பெயர் விபரம் எனக்கு தெரியாது. மாது சம்பவ இடத்தில் இருந்தார். நான் சொல்வது போல் போலிசார் சம்பவ இடம் வந்து வரைபடம் வரையவில்லை என்றாலும், காவல்நிலையத்தில் வைத்து சாட்சி கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. சாட்சி மாது என்னுடன் வேலை செய்வதால் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் கலிகோளை போலிசார் கைப்பற்றினார்களா என எனக்கு தெரியாது. என்னிடம் காண்பித்தார்கள் நான் சாட்சி கையொபப்ம் செய்துவிட்டு சென்றுவிட்டேன். அதன்பிறகு எடுத்துச்சென்றார்களா என எனக்கு தெரியாது. நான் கையொப்பம் செய்த தாளில் எழுதியிருந்த விபரம் எனக்கு தெரியாது.

Taken down by me/before me in Open Court. Read over/interpreted to the witness and acknowledged by him/her to be correct.

AJAY VIKRESH KUMAR G

Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.07.28 17:57:57 +0530

Judicial Magistrate,
Palacode.